## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – விடுதிகள் – மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய விடுதிக் கட்டடங்களை இடித்துவிட்டு 19 புதிய விடுதிக் கட்டடங்கள் ரூ. 45,39,91,666/- மதிப்பீட்டில் கட்டுதல் – நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை

அரசாணை (நிலை) எண்: 26

நாள் : 06.03.2019
விளம்பி வருடம்
மாசி திங்கள் 22–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க. எண். த3/3692/2014, நாள். 03.09.2018.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் 2018–2019ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் உரையில், 2018–2019–ஆம் ஆண்டில் 46 கோடி ரூபாய் செலவில் ஆதி திரராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் மாணாக்கர்களுக்கான 19 விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, ரூ.49.80 கோடி மதிப்பீட்டில் 19 புதிய விடுதிகள் கட்டுவதற்கான கருத்துருவினை தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டறிக்கைகளுடன் அரசின் பரிசீலனைக்கு அனுப்பி நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியிருந்தார்.

2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர், மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய விடுதிக் கட்டடங்களை இடித்துவிட்டு ரூ.45,39,91,666/- (ரூபாய் நாற்பத்து ஐந்து கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து அறுநூற்று அறுபத்து ஆறு மட்டும் ) மதிப்பீட்டில் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 19 புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது :-

| வ. எண். | விடுதியின் பெயர் மற்றும் மாவட்டம் | ஒரு விடுதியில் தங்கிப் பயிலும் மாணாக்கர் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்படும் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நல காந்திஜி மாணவர் விடுதி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம் | 200 | 335.77 |

(த.பி.பா.)

| | | | |
|---|---|---|---|
| 2. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, நாகப்பட்டினம், நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 3. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 4. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 5. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, திருமருகல், நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 6. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 7. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 8. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 9. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 10 | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, கொம்புக்காரனேந்தல், சிவகங்கை மாவட்டம் | 50 | 131.72 |
| 11. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, தேவக்கோட்டை–1. சிவகங்கை மாவட்டம் | 200 | 335.77 |
| 12. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, துறையூர், திருச்சி மாவட்டம் | 100 | 244.41 |
| 13. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி, தர்மபுரி, தர்மபுரி மாவட்டம் | 400 | 645.60 |
| 14. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, கடவூர், கரூர் மாவட்டம் | 100 | 244.41 |
| 15. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி, தாந்தோணிமலை, கரூர் மாவட்டம் | 100 | 244.41 |

(து.பி.பா.)

| | | | |
|---|---|---|---|
| 16. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் | 200 | 335.77 |
| 17. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் | 200 | 388.12 |
| 18. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி, போஜனபள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் | 200 | 335.77 |
| 19. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, பந்தநல்லூர், தஞ்சாவூர் மாவட்டம் | 100 | 244.41 |
| | **மொத்தம்** | | **4539.92** |

3. மேலே குறிப்பிட்டுள்ள பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998/விதிகள் 2000–ஐ பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படி, ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணி முன்னேற்றத்தினை கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியின் விரைவு மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். 10684/ஆதி(ம)பந/ 2019, நாள்.06.03.2019–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்:</u>

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர், மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர்
மாவட்ட கருவூல அலுவலர், மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர்

**(க.பி.பா.)**

**<u>நகல்:</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை –600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை –600 009.
நிதி(ஆதி(ம)பந)துறை, தலைமைச் செயலகம், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச்
செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ ஆதிந.5) துறை,
சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்